# ப்ரம்மவித்தியா.

௩-ம் புத்தகம்

பத்திராகிரயம்
1 வருஷம் 2—12—0
6 மாஸம் 1—8—0
3 மாஸம் 0—14—0
1 காபி - 0—2—6
இலங்கைக்கு 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

௰௯-ம் இலக்கம்

பத்திரிகையைத்தைமணியார்டராக வாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்கு அனுப்புகல்வேண்டும்.

[illegible] [illegible]

சிதம்பரம்:— ௧௮௮௯ளு பிப்ரவரிமீ ௨௮உ சர்வதாரி ஞூ மாசிமீ ௧௮உ


ப்ரம்மவித்யா.

[illegible] ௧௮உ

[illegible]

[illegible]

[illegible]!!

[illegible]

## நம் ப்ரம்மவித்தியா பத்திரிகாபிமானிகளில் கையொப்பப் பணம் அனுப்பாதருக்கும் நண்பர்களே!

இப்பத்திரிகையின் மூன்றாவது வருஷம் ஆரம்பமாகி இப்பொழுது 8-மாசங்கள் கழிந்தும் நீங்கள் இதுவரையில் உங்கள் கையொப்பத் தொகைகளை யனுப்பிவிட இசையாது அலசியமாயிருந்தால் இப்பொது நன்மையை நாம் தளர்வுறாது நடத்துதல் எப்படியாம். உங்கள் பேருதவிகளையே ஆதாரமாக நம்பி இவ்வுலோகோபகார நன்முயற்சியை மேற்கொண்ட நாம் அது கிடைக்கப்பெறுதொழியின் மற்றதற்கு யாதுசெய்வோம். பத்திரிகை அச்சிடுதற்கும் காகிதமுதலியன வாங்குதற்கும் தபாற்செலவு கொடுத்தற்கும் அவ்வப்பொழுது எவ்வளவு பொருள் வேண்டுமென்பது நீங்களறியாததன்றே. உங்களில் ஒவ்வொருவரும் "நம் தொகை சிறிதுதானே இஃதவர்க்கோர் பொருட்டாமெல்லவனுப்புவோம்" என எண்ணிப் பெரும் பாலாரங்ஙனமிருப்பின், நங்கருமம் எக்கதியுறும். ஆதலின், இவைகளைச் சற்றே சிந்தித்து உங்கள் கையொப்பத் தொகைகளை உடனே அனுப்பிவிடுதலே நீங்கள் எமக்குச் செயற்கரிய தொருபேருபகாரமாம்.

# ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்; சர்வதாரி-ஞூ மாசி-மீ 18-உ வியாழக்கிழமை.

## சம்ஸ்கிருதபாஷை.

### கடவுள்.

முன் தொடர்பு.

—:o:—

யாம் கண்ணுற்றுவரும் ஒவ்வொரு வஸ்துக்களுக்கும் காரணம் ஒன்று இன்றியமையாது பற்றி அதை நிரூபித்தல் ஆவ

[illegible]

ஸியகயாயிற்று. அக்காரணமும் யாம் பார்க்குந்தக்க ஒவ்வொரு பிராபஞ்சிக வஸ்துக்கள் எல்லாவற்றுக்கும் காரணமாய் இருத்தல் வேண்டும். உலகத்தில் காரணமின்றிக் காரியம் உண்டாதலை யாம் கண்டிலேம். உலகத்தில் அணுக்களே எல்லாவற்றுக்கும் காரணமெனக் கூறின், அஃதமையாது. உலகத்தில் நாம் கண்டமட்டில் ஏதேனும் ஒரு அணு ஒரு வஸ்துவை உண்டாக்கக் கண்டோமில்லை. அங்ஙனம் உண்டாகவுமாட்டாது. இனி ஓர் அணுவானது பெரிதாகத் தோன்றவேண்டுமெனில் தான் தனித்துப் பெருக்கமாட்டாது. "பெருப்ப" தெனில் ஓர் அணுவானது மற்றைப் பல அணுக்களுடன் சேர்ந்து கண்ணுக்குப் புலப்படும் தன்மை பெறுதலே. இனிக் குறைவெனப்படுவது மற்றை அணுக்களுடன் கூடிய அணுக்கள் பிரிந்து தனிநின்று புலன்களுக்குத் தோன்றாது மறைதலே. அணுக்களின்கணுள்ள சேர்தலும் பிரிதலுமே உலகாயமைந்தமையால் உலகத்திற்குக் காரணம் ஓர் அணுவெனச் சாற்றல் எவ்வாற்றானுமமையாது. இனி அணுக்களெல்லாம் ஒருங்குகூடி உலகத்திற்குக் காரணமாதலும் நியாயத்திற்குப் பொருந்தாமை காண்க. எங்ஙனமெனில், உலகத்தில் உள்ள அணுக்களெல்லாங் கூடி ஓர் காரியத்தையும் உண்டாக்காமையாலென்க. இனிக் காரியங்கள் விசித்திரங்களாயிருத்தலால் காரணங்களும் விசித்திரமாயிருத்தல் வேண்டுமெனக்கொண்டு பற்பலவிதமான அணுக்கூட்டங்களால் பற்பலவிதமான காரியங்களுமுண்டாகின்றன வென்றுரைத்தலும் முற்கூறியபடி யுத்திக்கமையாததே. எவ்வாறெனில், அவ்வாதிகள் கூற்று வருமாறு அமையுமாதலின்:—அணுக்கூட்டங்கள் அநேகங்கள். அவைகள் தம்முள் வேற்றுமைப்பட்டு வெவ்வேறுவிதமான காரியங்களை உண்டாக்கும் ஆற்றலுடையன. ஒவ்வொரு கூட்டமும் மற்றொன்றுடன் சேராது தன் தொழிலில் தான் சுதந்திரம் பெற்றன. தனிமுதல்களாய் அநாதிநித்தியங்களாய் உள்ளன" என்பதே. இங்ஙனமாயின் உலகத்தில் நாம் காணும் மரம் முதலிய காரியம் ஒன்றில் பட்டை தழை பழம் முதலியன வேறுபட்டுத்தோன்றுவதால் அவைகளுக்குத் தனித்தனியே அணுக்கூட்டங்கள் காரணமாகவேண்டி வரும். அங்ஙனமாயின் எங்கேனும் மரமில்லாவிடத்துப் புஷ்பங்கள் தழைகள் பட்டைகள் அகப்படலாம். அப்படியில்லாமையால் இலைகள் கனிகள் முதலியவற்றைத் தனித்தனியே உண்டாக்குமாற்றல் பெற்ற ஒவ்வோரணுக்கூட்டங்களைக் காலம் இடங்களுக்குத்தக்க இயக்கவலிமை பெற்றுத் தம்முட் சேர்த்துக்கொள்ளும் வலிமை விதையின்கணுள்ள அணுவுக்கே அமையுமென வாதித்தல் ஆவசியகமாம். சோதனைசெய்யின் அவ்வித்தின்கண் அமைந்த ஓர் அணுவுக்கே அவ்விதப் பேராற்றல் இருக்கின்றது. அவ்வொரு சிற்றணுத் தன்னிடமமைந்த ஆற்றலால் தன்னிலுமதிகமான அநேககோடி அணுக்கள் சேர்ந்த மரமென்னும் ஓர் காரியத்தை ஆக்கவும் அழிக்கவும் நேரிடுகின்றதல்லவா? அவ்வித அணு இப்பெருங்கூட்டங்களை இயக்குவதுபோல் தம்மினத்த மற்றோர் வித்தை இயக்குவதில்லை. அவ்விதமியக்குமேல் ஓர் வித்தின்கண் இரண்டு முளைகள் உண்டாகக் காணலாம். அவ்வித்தின்கண் அமைந்த அணுக்களுக்குத் தமக்கு வேண்டிய ஓர் சரீரத்தை உண்டாக்கிக்கொள்ளுதல் இயற்கையிலமைந்தகுணமாம். அது

[illegible]

தம்மினமாகிய மற்றோர் வித்தின் இயக்கத்தால் ஆகர்ஷிக்கப்பட்ட வஸ்துவை இழுக்குந் தன்மை இதற்கில்லை. ஆதலாற்றான் அதிசமீபத்தில் மற்றோர் மரமிருப்பினும் அதின் பழங்களை அல்லது பட்டைகளை இம்மரத்திலுள்ள சக்தி இழுத்துக்கொள்வதில்லை. பாருங்கள்! ஓர் வகை மரங்கள் ஓரேயிடத்திருப்பினும் அவை ஒன்றுக்கொன்று நெருங்கி வளரினும் ஒன்றுபடுவதில்லையாம். ஆதலால் விதையின்கண் அமைந்த சில அணுக்களுக்குச் சாதாரணமாய் அநேக அணுக்களை இயக்குந்தன்மையும் மற்றதால் ஆகர்ஷிக்கப்பட்ட ஒன்றை இயக்காது நிற்றலும் இயல்பேயாமன்றோ. இங்ஙனமாயின் நாம் வசிக்கும் பூமண்டலமுதலிய பேரணுக் கூட்டம் சூரியமண்டலத்தால் இயக்கப்பெறுவதால் இதன் ஆற்றல் சூரியமண்டலத்தின்கணுள் ஆற்றலுக்குச் சுதந்திரப்பட்டது. அது சந்திரமண்டலத்தை இயக்குதல் எப்படி? இப்பூமண்டலத்திற்கு இயற்கையில் சந்திரமண்டலத்தைச் சுதந்திரப்படுத்தி இயக்குந் தன்மை இருந்தால் இது மற்றொன்றுக்குச் சுதந்திரப்படுதல் எங்ஙனம்? இனிக் கண்டதைக்கொண்டு முடிப்போமென்று நாம் ஓர் வழி கொள்ளின், அஃதிங்ஙனமமையும். அஃதாவது:—"சந்திரமண்டலம் தம்முட்பிறந்த கல் மரம் முதலிய வஸ்துக்களை இயக்குந்தன்மையுள்ளது. பூமண்டலமோ அவ்வஸ்துக்களடங்கிய சந்திரமண்டலத்தையும் தம்முள்ளமைந்த வஸ்துக்களையும் இயக்கும் சூரியமண்டலம் தம்முளுள்ள பொருள்களையும் அநேகமண்டலங்களையும் இயக்குந்தன்மைபெற்ற இப்பூமண்டலம்போன்ற பல அண்டங்களையும் இயக்கும்" என்பது. இங்ஙனமாயின் இவ்விதம் பல அண்டங்களை இயக்கும் ஓர் பெருந்தன்மை ஓர் சிற்றணுவில் அமைவது எவ்வாற்றானுமமையாதென்க. இனி ஓர் அணுவின்கண்ணமைந்த ஓர் ஆற்றலே இவ்வுலகத்தை யெல்லாம் இயக்குகின்றதென வாதியாது "யாம் ஏற்றிவைத்த விளக்கு நன்றாயெரிந்து நான்குயோசனை தூரம் வெளிச்சம் காட்டியது" என்பதுபோல் எல்லாருக்கும் ஓர் பெருநகை விளைக்குமன்றி வேறில்லை. ஆதலால், அறிஞர்காள்! இவ்வகிலாண்டபிண்டங்களை இயக்குந்தன்மை ஓர் போற்றலின்றி அமைதல் கூடாமையால் அதை அணுக்களுக்கென வாதித்தல் கூடாது. இனி அநேககோடி அண்டசராசரங்களை இயக்கும் வன்மை ஓர் அணுவுக்குண்டென வாதித்தலிலும் சர்வவல்லமைபெற்ற ஓர் கடவுளை ஒப்புதலே நியாயமாமென்க. இனி விதண்டாவாதத்தால் ஏன் அணுவே அவ்விதமாகக்கூடாதோவென வினவின் அதற்குத்தக்க பிரமாணங் காட்டுவோம். உலகத்தில் நாம் காணக்கூடும் மூன்று பகுதிகளாகிய அவற்றுள் ஒன்று எல்லாவற்றையும் இயக்குந் தன்மை பெற்றதும் வித்துக்களிலமைந்த சில அணுக்கள் தம்மிலும் வேறான சிலவற்றை இயக்குந்தன்மை பெற்றனவெனவும் மற்றவைக்கு இயங்குக்குந்தன்மையேயன்றி இயக்குந்தன்மை இல்லையெனவும் ஒப்புதலால் ஏதோ ஒரு வஸ்து எல்லாவற்றையும் இயக்கும் தன்மை பெற்றதாதலால் அதுவே ஆத்திகர் கடவுளெனச்சொல்வதெனவும் தமக்கு வேண்டியமட்டில் ஆகர்ஷிக்கும் சிலவணுக்களே ஜீவர்களெனவும் இயக்கும் தன்மை ஒன்றுமட்டில் பெற்று இயக்கும் தன்மை பெறாத மற்றை அணுக்கள் ஜடங்களெனவும் இம்முப்பொருள்களும் சொல்லாமலமைந்தன. அவர்களுக்கும் இம்முப்பொருள்கள் ஒப்பவேண்டியது ஆவசியகமே. ஆயினும் அவர்கட

[illegible]

[illegible]

[illegible]

வுளென்றும் ஜீவனென்றும் சடமென்றும் பெயர்களை மாத்திரம் எடுத்து வழங்குவதில்லை. அவர்களுக்கும் சூரியமண்டலம் முதலியவற்றின்கண் பல அண்டங்களை இயக்கும் போற்றல் ஓரிடம் நிலைபெறவேண்டி அப்போற்றலுடைய ஓர்விதப்பொருளை ஒப்புதல் அவசியமாகின்றது. ஆயின் அவர்கள் அதை அறிவுள்ள வஸ்துவாய்க் கூறுவதில்லை. அவர் கூறுவிடினும் தத்தம் கல்வினை தீவினைகளுக்கேற்பத் தனுக்களையும் கரங்களையும் இயக்கும் வலிமைபெற்ற வித்துக்களொன்றே அறிவுள்ளதெனச் சொன்னமையால் அவ்வித வித்துக்களைச் சேர்க்கவும் பிரிக்கவும் போற்றல் பெற்ற அவ்வஸ்து அசேதனமெனக் கூறுதல் அறிஞர்களுக்குப் பெருநகை விளைக்காதொழியுமோ. ஆதலால், சடம் ஜீவன் ஈஸ்வரன் என்னும் முப்பொருள்களும் சத்தித்தலில் எத்துணையும் ஐயமின்றும். மேலும் உலகத்தில் ஒவ்வோரணுக்களும் தம்மினும் அளவிற்சிறிதாய் அல்லது சமானமாய் உள்ள வஸ்துவை இயக்கும் என்பதே யுக்திக்கொத்தது. ஏனெனில் நாம் பார்க்கும் காந்தமுதலிய இயக்கும் வஸ்துக்கள் எலுமிச்சங்காயளவு பருமனுள்ளதாயிருப்பின அஃது பூசினிக்காயளவுள்ள ஓர் இரும்பை இயக்கக் கண்டோமில்லை. தம்மிலும் சிறிய இரும்பையே இயக்கக்கண்டோம். ஆதலால் சூரியன் பூமண்டலம் முதலியவற்றின்கணுள்ள ஓரணுவுக்குத் தம்மிலும் அதிக அளவுள்ள அநேக அண்டங்களை இயக்குந் தன்மையைத் தாபித்தல் எவ்வாற்றானும் அமையாவாம். இனி முற்கூறிய காரணங்களாலும் அனுபவத்தாலும் இவ்வுலகம அப்பரம்பொருளாற்றான் தொழிற்படுமென்பது தாமே அமைந்ததென்க. இனி உலக வஸ்துக்கள் மூன்றுவிதமாயினவெனில் அவற்றின் வரன்முறை இது:—அணுகள் அறிவுபெற்றனவாயின் அவைகளை ஆன்மாக்களெனச் சொல்வார்கள். அவைகளில் அறிவற்றவைகளாயுள்ளனவே பாசங்களெனவும் மலங்களெனவும் ஜடங்களெனவும் கூறப்படும். சர்வவல்லமையும் பெற்ற அப்பரம்பொருளொன்றே கடவுளெனச் சொல்லப்படும். அவற்றுள் கடவுள் சர்வவியாபகன் சர்வ வல்லமையும் பெற்றவன். அவன் சுவதந்திரன். மற்றை இருவகை அணுககளும் அசுவதந்திரமுடையன. இவற்றையே அநேக வித்துவான்கள் பசு பாசம் பதி என்றும், சித்து அசித்து ஈஸ்வரனென்றும், சடம் ஜீவன் ஈஸ்வரன் என்றும் பல சொற்களால் வழங்கிவருகின்றார்கள். ஆதலால் அணுக்களிடம் அப்போற்றலமையாதுபற்றி ஓர் பரம்பொருள் சித்தித்தல் எத்துணையும் தடைபடாததொன்றும். மேலும், அணுக்களைக் காரணமெனச்சாதிக்கும் அவ்வாதிகளுக்கும் காலவேற்றுமையால் சேர்க்கை பிரிவு அமையுமாதலால் இவ்வநேக அண்டசராசரங்களை இயக்கும் ஓர் போற்றல் ஓர் சமயம குன்றினுங்குன்றும். இனி அவ்விதமும் நேரிடுமென ஒருவர் வாதிப்பின் அஃது பொருந்தாமை காண்க:—உலகத்தில் எவ்வஸ்துவின்கண் விருத்தியிருக்கின்றதோ அங்கே காலத்தால் குறைவுமுண்டாகும். அவ்விதமின்றி ஒரே படித்தாயிருக்கும் இச்சக்திக்குக் குறைவு ஓர்காலத்தும் உளதாகாதென்பது. ஆதலால் முடிந்தது முடிததல் யாதெனின் ஜீவன் சடம் என்னும் இவ்விருபொருள்களின் ஆற்றல் காலததால் மாறுபடும். அப்பரம்பொருளின் போற்றலோ ஒரே வழி நிற்கும். ஓர் காலத்தும் மாறாது. அதுகொண்டே இப்பூமண்டலத்தினகண் வசிப்பவர்கள் கடவுளைச் சூரியமண்டலத்தின்கண் வழிபடவேண்டுமென வேதங்கள் போற்

[illegible]

றுகின்றன. உலகத்தில் வாழும் ஜீவகோடிகளை அவரவர் தொழில்களில் அமையச்செய்து நடத்து இப்பூமண்டலத்தையும் இயக்கிநிற்கும் ஓர் பேராற்றல் அங்கே இருந்தலாகலனைக்: ஆதலால் "கடவுளுண்டென்பதற்குப் பதிலாக அப்பரமாணுவமையை அணுக்களுக்கியற்தாலாகாதோ" என்றும் "இனி அணுக்கள் வாக பேதத்தால் ஏன்பலவித உலகப்பொருள்களாகக்கூடாது?" என்றும் நாத்திகர் எழுப்பிய இருவினாக்கள் மறுக்கப்பட்டொழிந்தனவென்றறிக. இனி "முற்றிலும் புலன்களுக்குப் புறம்பான அப்பொருளை ஒப்புவதில் முக்கியமான காரணம் யாது?" எனனும் கேள்வியைச் சிறிது விரித்து மறுப்பாம்.

வரும்.

## விக்கிரகாராதனம்.

(அனுபந்தம்.)

—:o:—

இங்கு அவ்வித பாவனை விபரீதமெனச் சொல்லல் மாத்திரம் கூடாதென்பதல்ல; மற்று அது உண்மையையும் விளக்குமென்பதே கருத்து. உலகத்தில் ஒரு கணிதவித்துவான் கணித வித்தையைத் தனது மாணாக்கர்க்குக் கற்பிக்குங்கால் 'க' என்னும் எழுத்தைக்கொண்டு நூறு மனிதர்களைக் குறிப்பிட்டால் அது பாவனையேயென்றெண்ணி அதனாலாயும் கணக்கையும் ஒருவன் பொய்யெனச் சொல்லுவானோ! இனிப் படத்திலெழுதிய பூமண்டலத்தைக்கண்டு ஒருவன் அதுகொண்டு பூமியின் அமைப்பைப்பற்றி ஒருவன் நிச்சயித்தால் அதுவும் பொய்யென இவர் சாற்றுவரோ யாதோ அறியேம். இனிக் கோளகணிதத்தில் கையிலடங்கிய ஓர் சிறு துண்டுக் கடிதத்தில் சுக்கிரன், சந்திரன், சூரியன் இவர்களை ஒரு ரேகையாய் எழுதிக்காட்டி அதைக்கொண்டு கணக்கிடுவனேல் அதனால் அவன் கண்ட உண்மையுந் தவறுமோ? அவன் எழுதியபடி கிரகணம் முதலியவை உண்டாகாமல் போமோ? இனி நமது கண்பார் "அநேககோடி யோசனைகளளவுள்ள சூரியன் முதலிய பெரிய அண்டங்களை ஓர் சிறு துண்டில் எழுதக் குறுகியதாயும் சிற்றளவுள்ளதாயும் பாவித்தல் கொடிய செய்கை. அவர் கண்டதுண்மையுமல்ல" எனவாதிப்பினும் வாதிப்பர். இனி "அண்டங்கள் அனைத்தையும் தமது கண்களாற் காணுவது எவருக்குங் கூடாமையால் அங்கு அவ்விதம் நூலறிவைக்கொண்டே பாவிக்க நேர்ந்தது" எனில், கடவுளையும் ஒருவர் காணார் ஆதலால் அதையும் பாவித்தலே அங்கு தக்க வழி என்று சாற்றுவதும் ஏன் மணம்பொறாது? ஆதலால் நாமும் வேதம் முதலிய சாத்திரங்களில் சொல்லப்பட்ட திவ்விய ரூபங்களை உருவப்படுத்தி அதைத் தியானித்தலே எமக்கு நியாயமெனக். அதன் பயனே மனம் உறுதிபெறுதல், கடவுளிடம் பேரன்புண்டாதல், நமக்கு அதுவழி நிற்றலால் பரமானந்தம்பெருகுதல் என்பதாகியாம். ஆகையால் கோளகணித விதிபோல இக்கடவுள் விஷயத்திலும் நல்ல பாவனையே நற்பயனளிக்குமெனக. இனிப் பாவனை என்பது அதிகமாய் நற்பயனையளிக்கும் என்றும் அது உண்மையைக்காட்டும் கருவியென்றும் சாதிப்பாம். பாருங்கள்! இங்கு எழுதிவரும் எழுத்தாகும் கோடுகள் உண்மையில் எழுத்துக்களல்லவே. ஆயினும் அவைகள் உண்மை எழுத்துக்களை நினைக்கவும் அதனால் பொருள் விளங்கவும் கருவியாக நிற்கவில்லையா? இனி அந்தக் கோடுகளை எழுத்துக்களாகப் பாவித்தல்

[illegible]

கெடுகியாமோ? நமது நண்பர் சொல்லியபடி அங்குவடிவெழுத்துக்கும் ஒலியெழுத்துக்கும் வேற்றுமை வருமாறு இருத்தலால் அவைகளை ஒலியெழுத்தாக நினைத்தல் குற்றமாமன்றோ? பாருங்கள்! ஒலியெழுத்துக்கள் காதாற் கேட்கத்தக்கன; வடிவெழுத்துக்களோ! கண்ணாலன்றி அறியக்கூடா. அவ்வொலிகள் ஒவ்வொரு லக்ஷணங்களில் ஒழியும். வடிவெழுத்துக்களோ நீடித்தகாலம் இருக்கத்தக்கன. அவ்வொலி எழுத்துக்கள் மனிதர் முதலியோர் முகங்களிலுள்ளன. மற்றவை ஏடுகளிலும் மற்றைய சாதாரணப்பத்திரங்களிலுமே. ஆகலின் இவ்விரு வெழுத்துக்களையும் ஒன்றாகப் பாவிப்பது உசிதமில்லையென எவர் சாதிப்பர்? அவ்விதம் பிம்பங்களில் யாம் தியானிப்பது உசிதமென்பதாய் அமையும். ஆதலாற்றான் ருக்கு, யெஜுஸ், சாமம் இம்மூன்று வேதங்களிலும் இம்மந்திரம் சொல்லப்படுகிறது. "ஆவோ ராஜா நமத்வரஸ்ய ருத்ரம் ஹோதாரம் ஸத்யயஜம் ரோதஸ்யோ: அக்நிம் புரா தநயித்நோரசித்தாத்ஹிரண்யரூபமவஸே க்ருணுத்வம்" ஆவோ ராஜனமத்துவாஸ்ய ருத்திரம் ஹோதாரம் ஸத்தியயஜம்ரோதஸ்யோ: அக்கினிம் புராதன யித்னோரசித்தாத்ஹிரண்யரூபமவஸேகிருணுத்வம்" இதன்பொருள். "ரோதஸ்யோ:" "ஆரோதஸயோ:" வானத்திலும் பூமியிலும் புகழ்பெற்றவர் "அத்வரஸ்ய" "அத்வரஸ்ய" யாகம்முதலிய பல கருமங்களுக்கு "ராஜாநம்" "ராஜானம்" சுதந்திரனுள்ளவன் "ஸத்யயஜம்" "ஸத்தியயஜம்" உண்மையால பூஜிக்கப்படுகிறவன் "ஹோதாரம்" "ஹொதாரம்" எல்லோராலும் பூஜிக்கப்படுபவன். (இனி ஹோமம் முதலியவற்றால் ஆராதிக்கப்பட்டவன் என்று வேறு எடுத்துக் கூறுவதால் முன்னுண்மையால் பூஜிக்கப்படுபவன் என்றது பிம்பாராதனத்தையே குறித்தது.) "அக்நிம்" "அக்னிம்" "அக்னியின்கண் அந்தணர்களுள்ளான்" என்றருத்திரன் அக்னியின்கணுள்ளான் "உருத்திரனே அக்னி" "யான் அக்னியின் உள்ளிருப்பேன்" என்பதாதி வசனங்களால் அக்கினியெனச் சொல்லத்தக்கவன் அல்லது எல்லோருக்கும் கற்கதியளிப்பவன், "ருத்ரம்" "ருத்ரம்" பரமேசுவரன் இவனை "அசித்தாத்" "அசித்தாத்" மனதிற்கெட்டாததாயுள்ள "தநயித்நோ:" "தனயித்னோ:" மேகம்போன்ற மாணத்திற்கு "புரா" "புரா" முன்னரே "அவஸே" "அவஸே" மாக்ஷத்திற்காக "ஹிரண்யரூபம்" "ஹிரண்யரூபம்" ஸூரியமண்டல முதலியவற்றில் ஆராதிக்கத்தக்கவனும் பொன் முதலியவற்றால் ஏற்பட்ட உருவமுடையவனுக "க்ருணுத்வம்" "கிருணுத்வம்" பூசைசெய்க" என்பதே. இம்மந்திரம் உருத்திரபூஜையிற்றானே ஸாமவிதான பிராமணத்தில் விநியோகிக்கப்படுகின்றது. "ஆவோராஜா முதலிய சாமங்கள்———உருத்திரசங்கிதை அதைச் சபித்தலால் ருத்திரனைப் பிரீதிசெய்விப்பான்" என்று இங்கு நன்றாய்ப் பிம்பபூசை ஒன்றே விதிக்கப்படுகின்றது. ஆதல்கொண்டே முன மந்திரத்தில் "விஶ்வதஃ பாஸி ரக்ஷக:" "விதிருதப்பாஸிருக்குமனு" என்று இருக்கின்றது. "வஷா" "பூஷா" "விபுபோஷன்" என்பதாதி வாக்கியங்களால் உலகத்தை ரக்ஷிப்பவன் "ரக்ஷக:

[illegible]

"ருக்மணு" பொன்னல் "வியூகஃ" விதிருத:" பிம்பமாய் அமைக்கப்பட்டவனக "வாஸி" "பாஸி" உலகத்தைக் காக்கின்றாய்" என்பதாதிபிரமாணங்களால் இப்பிம்பாராதனம் வைதிகமென்றும் நற்பாவனையே அவ்விதப்பாவனை என்றும், அதுவே எம்மவர்க்கு ஆவசியகமான வைதிக காரியமென்றும் துணிபப்பட்டது. பிறகு இலிங்கம் முதலிய ஏற்பாடுகளின் பயனைப்பற்றி நிருபிப்பாம். இனி மற்றைய கேழ்விகளைப்பற்றிக் கவனிப்பாம். அக்கேழ்வி இது:—"எந்த வித்துவான்கள் பிராமணங்களையும் உபநிடதங்களையும் பிரமாணமாகவும் வேதமாகவும் நம்பி இவ்விஷயங்களுக்கு விடைபகருகின்றனரோ அவரிடம் யாம் முன்னரே குறிப்பது யாதெனில், நான்கு வேதங்களின் சங்கிதைகளில் உள்ள மந்திரங்களில இவைகளைப்பற்றி யாதுமில்லை என்பதே" என்பது. இங்கு இவர் எழுதும் வாக்கியத்தில் "பிராமணங்களையும் உபநிடதங்களையும் வேதங்கள் என ஒப்பி" என்பதால் தாம் ஒப்பாத விஷயம் இது என்று தமது அபிப்பிராயத்தை வெளியிடுகிறார். இனி இவரை நாம் கேட்கவேண்டியது ஒன்று உண்டு. அதாவது "இவர் உபநிடதங்களை வேதங்களல்லவெனச் சாதிப்பின் அவை எவ்விதத்திலும் பிரமாணமாவதில்லை என்றோ? அல்லது புராணங்களைப்போன்ற பிரமாணம் என்பதோ? இவ்விஷயங்களைப்பற்றிச் சிறிதும் இவர் உரைந்தாரில்லை. எவ்விதமாயினும் இருவகையிலும் யாம் குற்றங்களை எடுத்துரைப்போமேல் இருவகையும் ஒழிந்துபோம். அவ்வுபநிடதங்கள் முற்றிலும் அப்பிரமாணங்களென உரைத்தல் மணம்பெறாது. அவ்வுபநிடதங்களில் எழுதப்பட்ட ஒவ்வொரு சங்கதி சோதனைக்குச் சரியாய் இருப்பதால் அதிற்காரணமில்லாமற் குற்றங்கூறல் அமையாமையாலென்க." மற்றொரு வழியாயின் அதே காண்டத்தில் வேதத்தன்மை நன்கு புலப்படுவதால் அதை வேதங்களல்லவெனல் எவ்வாற்றானுமியையாதென்க. ஆதலாற்றான் "காண்டல் முதலியனவைகளால் காணற்கரிய வஸ்துவைக் கை நெல்லிபோல் காட்டுங்கருவி வேதம்" எனப் பட்டபாதர் கூறினர். ஜட ஜீவ ஈஸ்வர வத்துக்களின் உண்மை அதே புத்தகங்களில் புலப்படுதலாலென்க. இனி மனிதருக்கு ஆத்திகத்தன்மை சித்தித்தலே அப்பாகத்திலமைந்திருக்க அதை அப்பிரமாணமெனச் சாதித்தல் மிகவும் பொருந்தாது. ஆதலாற்றான் நம்முன்னோர் ஸ்ரீவாதராயணமுனிவர் முதலியோர் வேதாந்தங்களென்னும் உபநிடதங்களே உயர்ந்த பிரமாணங்கள் என வாதித்தார்கள். நிற்க. தற்காலத்திற் சிலர் நம்மதங்களில் உண்மையறியாது மற்றவர் எழுதிய நூல்களையே படித்தும், நமது நூல்களை அவர்கள் மொழிபெயர்ப்பினாற்றானே அறிந்ததாகப் பாவித்தும் அவர்கள் உபந்நியாசங்களையே கேட்டும் தம்முட்டாம் சித்தாந்தம் செய்துகொள்ளுகிறார்கள். அவையாவன.—"ஆதியில் நம்மவர் அறிவின்மையாற் கண்ட வத்துக்களையெல்லாம் தோன்றியது தோன்றியபடிக் கும்பிட்டுவந்தார்கள். அக்காலத்தில் எழுதப்பட்டன:—சாமானியமாய்ச் சங்கிதாமந்திரங்கள் பிறகு காலஞ்செல்லச் செல்லப் புத்திநுட்பத்தால் பற்பல வத்துக்களை ஆராய்ந்து அதிற்கண்ட உண்மைகளைச் சேர்த்து உபநிடதங்கள் ஆக்கினார்கள். பிறகு இவ்வுபநிடதங்கள் மேலான பொருள் பெற்றமையால் முக்கியப் பிரமாணமானவைகள் என மற்றவர் ஒப்ப நேர்ந்தது" என்பதாதியே. இவ்

[illegible]

விதம் அவர் எழுதும் விஷயம் எச்சருத்தாலெனில், ஓர் சமயம் ஆரியன் ஒருவன் தன் மத புத்தகத்தையும் மற்றவன் மத புத்தகத்தையும் ஒத்துப்பார்ப்பதுடன் இவ்விஷயங்களையும் நினைத்துப்பார்த்தால் "நாம் முன் நெருப்பைக் கும்பிட்டோம் "அவர் மரத்தைக் கும்பிட்டார் "வேதங்களில் கர்மகாண்டம் ஞானகாண்டம் இரண்டும் எழக்குமுண்டு" அவர் புத்தகமும் முன் பின்னேற்பாடுகள் அமையப்பெற்றது" எமக்கு உபநிடதமே முக்கியம் "அவர்களுக்குப் பின்னேற்பாடே முக்கிய" என்று பரிசீலித்து இரண்டு மதத்தையும் ஒன்று என்று நிச்சயிப்பார்" என்பதே. இவ்விதம் நமமவர்களை மயக்கவேண்டி அவர் எழுதிவைத்த புஸ்தகங்களின் உண்மை அறியாது அந்தோ! வீணில் அதையே படித்துப் பாடுபடுகின்றார்கள். மேலும் இவர்கள் ஒப்பியபடி உபநிடதங்களென்பன பிற்காலத்து உதித்த சில மஹான்களால் வரையப்பட்டனவென்பதும் மற்றும் சங்கிதையென்பன உண்மையறியாது உலகத்தில் கண்டதெல்லாம் தெய்வமெனக் கொண்டாடியவர் எழுதியதென்பதும் உண்மையாயினும் அறிவீனர்கள் எழுதிய வீண் வார்த்தையாகிய சங்கிதைகளில் இவருக்கு இவ்வளவு சிரத்தை யுண்டானது எக்காரணம் பற்றியோ! பாருங்கள்! ஜைமுனி மஹரிஷி பிராமணங்களுட்படச் சங்கிதைகள் பிரமாணங்களெனவும் முனிவர்மணியாய ஸ்ரீவாதராயணமுனிவர் சுருதி முடிவாகிய உபநிடதமே முக்கிப் பிரமாணமெனவும் சாற்றுகின்றார்கள். இங்ஙனமிருக்க நமது நண்பர் நாம் சொல்லவேண்டிய யுக்திகளைப்பற்றிமட்டில் நமமவர்கொண்ட ஆறுசாஸ்திரங்களில் அடங்கியிருக்கவேண்டுமென்று கூறினாரேயன்றித் தம் விஷயத்தில் அவ்வாறு சாஸ்திர விதிகளையும் அச்சாஸ்திர கர்த்தர் கருத்துக்களையும் பற்றி நின்றாரில்லை. இனி ஓர்கால் சங்கிதைகள் முதலில எழுதப்பட்டமையால் அதுவே பிரமாணமாமென்று சொல்லின இவர் பிரமாணமாவதையும் முற்றோன்றியதையும் பகுத்தறிந்தாரில்லையென வெள்ளிடைமலைபோற் றோன்றும். இனி இவரைக் கேட்கும் வினவொன்றுண்டு. அதாவது:—இவர் நமது கன்ம மீமாஞ்சா சாஸ்திரத்தைக் கடந்து அதற்குக் கர்த்தராய் எழுந்த ஸ்ரீஜைமுனி மஹரிஷியின் அபிப்பிராயத்தை மறுந்ததற்குக் காரணம் யாதோ! அம்முனிவர் மந்திரங்களைப் பொருட்படுத்தும் விஷயத்தில் பிராமணங்களே முக்கியப்பிரமாணங்களென "வசனத்தால் தன்பொருள் விட்டது ஐந்திரியமாகுய" என்னும் சூத்திரத்தில் வெளியிட்டார். இச்சூத்திரத்திலுள்ள வசனம் என்னும் பதம் "ஐந்திரியென்னும் இருக்கால் கார்கசத்தியத்தைப் பூஜிக்க" என்று தொடங்கிய விதிகளையே குறிக்கின்றது. ஆதலால பிராமணங்களுக்கும் உபநிடதங்களுக்கும் மந்திரங்களுக்கும் இவர் காட்டிய வேற்றுமை மணம்பெறுதொழிந்தமை காண்க. இனி இவர் கருத்து யாதெனில் "யாம் ஒருசமயம் உபநிடதங்களைப் பிரமாணமெனக் கொள்வோமாயின் அதில் இப்பிம்பாராதனத்தை எடுத்துக்காட்டும் பல வசனங்களிருத்தலால் நமது வாதம் மணம்பெறுதொழியும்" என்பதே. ஆதலாற்றான் இவர் அவ்வுபநிடதங்களை அப்பிரமாணமெனக் குறிப்பிட்டார். இனி இவர் இவ்வெறுஞ்சொற்களால் அப்பிரமாணமெனச் சாதிப்பின் அதுகொண்டு உபநிடதங்களிற் கூறிய உண்மைகள் பொய்யாய்விடுமோ! இவர் ஒப்பியவாறு ஒருவன் கொள்ளினும் உண்மையறியாதவர் எழுதியதாய சங்கிதையிற் காணப்பட்ட யாகமுதலிய கன்மங்களிலும் உண்மையறிந்த பெரியோரெழுதிய உபநிடதங்களிற்காண

[illegible]

𑌸𑌮𑍍𑌪𑌾𑌦𑌕𑌃.

## 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌮𑍍

### 𑌉𑌪𑍋𑌦𑍍𑌘𑌾𑌤𑌃

1.

—:o:—

[illegible]

ப்பட்ட இப்பிம்பாராதனம் முற்றிலும் உண்மையேயெனச் சொல்லாதேயமைந்தது. இனி இவர் கருத்தை உண்ணோக்கில் கன்மங்களினும் ஞானமே சிறந்ததென இவர் வாதத்தால் இவருக்கும் உபநிடதங்களில் அதிகப் பற்றுள்ளதாகவே புலப்படுகின்றது. ஆயினும் பிம்பாராதனத்துக்குச் சோபித் தமக்குக்கன்மகாண்டங்களில் அதிகப் பற்றிருப்பதுபோல் காட்டி அதற்கென ஓர் வழி விடுகின்றார். இனி அவரை வினவின் "யாம் விக்கிரகங்களிற் கடவுளை வணக்குவதில்லை. நேரே அப்பரம்பொருளைத் தியானிக்கின்றோமென ஓர் ஞானி வேடம்பூண்டொழுகுகின்றார். இவர் உண்மையில் சங்கிதைகளையே முக்கியப் பிரமாணமெனக் கொண்டவராயின் இவர் யாக முதலிய கிரியைகளையே நடாத்த முயல்வார். அங்ஙனமில்லாமையால் அவர் நமது ஆரிய சித்தாந்திகளை மயக்கவே ஓர் வழி எடுத்தாரெனக் கண்டொழிக. ஆதலாற்றான் நாம் இதற்கு வேண்டிய மந்திரங்களையெல்லாம் சங்கிதைகளிற்றானே யிருந்தெடுத்துக் காட்டினோம். மந்திரங்களைச் சொல்லின் அதன்பொருள் வேறென இவர் கூறுவாரென்றெண்ணி அதற்கு வேண்டிய பிரமாணங்களை எடுத்துக்காட்டினோம்.

வரும்.

## வியாகரணம்.

(முன்தொடர்பு.)

—:o:—

பட்டோஜி தீக்ஷிதரென்னும் அறிஞர்மணிக்கு ஓர் புதல்வர் உண்டாய் அவர் துறவியாய் நின்று ஸ்ரீராம ஆசிரமசுவாமிகளெனப் பெயர்பெற்று அமரசிம்மன் இயற்றிய நாமலிங்காநுசாசனமென்னும் நிகண்டுக்கு வையாகரணஹிருதயங்கமம் என்னும் ஓர் விருத்தி செய்தருளினர். அவரது குமாரரோ அரிதீக்ஷிதரெனப் பெரும் புகழ் பெற்றவர். அவர்தான் தமது பிதாமகரியற்றி பெருநூல்களுக்கு முதலுரையாசிரியரானவர். அப்பட்டோஜி தீக்ஷிதரவர்கள் செய்தருளிய சித்தாந்தகௌமுதி பிரௌடமனோரமை சப்தகௌஸ்துபம் வையாகரணபூஷணம் ஆகிய இவைகட்டு முறையே பிருகத்சத்தேந்துசேகரம் சப்தரத்தினம் பிரபை பிருகதர்ப்பணம் என்னும் கிரந்தங்களையே உரையாகச் செய்தருளினர். இவர் எழுதிய இப்பெருநூல்களே பின் வந்தவர்களுக்குப் பெரும் பற்றாயிற்று. அதைப்பற்றி வந்த வழிநூலாசிரியர்கள் பலருளர். அவர்களுள் நாகேசபட்டரென்பவர் முதல்வர். இந்நாகேசபட்டர் பதஞ்சலியே பின் வந்தாரோவென ஐயமுறத்தக்க பேராற்றலுள்ளவர். ஆதலாற்றான், பதஞ்சலி மகாபாஷ்யத்தின் உண்மைபறிந்தவரென இவரைச் சொல்வர். இவர் வசித்தது சிரிங்கிபேரபுரம். இது கங்காதீரத்துள்ளது. அவர் அங்கு வசித்தாரென்பது அவர் எழுதிய புஸ்தகங்களிற்றானே விளங்கும். அவர் தாம் அரிதீக்ஷிதரவர்கள் சிஷ்யரெனப் பலவிடங்களிற் சொல்லுகின்றார். அவர் எழுதிய புஸ்தகங்கள் அநேகம் இப்

[illegible]

—:o:—

[illegible]

—:o:—

[illegible]

பொழுது வழக்கத்தில் இருந்து வருகின்றன. அவை மாபாடியத் திருப்பாற்கடல் கடைந்தெடுத்த தெளிபொருட்டிருவமிழ்தெனத் தற்காலத்து மேலோர் கொள்கை. அவர் எழுதிய புத்தகங்களுள் முதற்புத்தகமாகிய மஞ்சூஷையென்பது பதஞ்சலியார் கொண்ட நாதப்பிரம வாதத்தை காட்டும் ஓர் பெருநூலாய்ப் பெருமஞ்சூஷை யென்றும் லகுமஞ்சூஷையெயென்றும் பரமகுலமஞ்சூஷை யென்றும் மூன்று புஸ்தகங்களாயிருக்கின்றன. அதில் முதற்புத்தகமொழிந்த மற்றையவை இப்பொழுதும் அகப்படும். இனிப் பாஷ்யப்பிரதீப உத்யோதம் என்னும் ஓர் புத்தகம் மாபாஷ்யம் கையடம் இவ்விரு நூல்களின் உட்கருத்துக்களை எடுத்து விளக்கி அப்புத்தகங்களைக் கற்பவர்களுக்கு அருந்துணையாய் நின்றுளது. இனிச்சத்தேந்துசேகரம் என்னும் ஓர் புத்தகம் சித்தாந்தகௌமுதிக்கு ஓர் வியாக்கியானமாய் மனோரமையிற் காணுத பல நற்பொருட்களை அடக்கிக்கொண்டது. அவர் இருக்குவேதத்தைப்பற்றி எழுதிய ஐககுருத்தியவாதம் என்பது இத்தேசத்தகப்படுவதரிது. அளவிற் சிறிதும் பெரும் புகழ் பெற்றதுமான பரிபாஷேந்துசேகரம் என்னும் ஓர் புத்தகம் அவராற்றுன் எழுதப்பட்டது. இனிப் புத்தகங்களின் அளவும் அவற்றின் முறையும் அவற்றுள் மஞ்சூஷைசப்தேந்துசேகரம் இவற்றின் பெருமையும் அவர் கேவலாத்வைதி சைவரொன்பதும் காரணங்களுடன் பின்னரெடுத்துரைப்பாம்.

வரும்.

## கடிதம்.

—:o:—

கடிதகர்த்தர்களுடைய அபிப்பிராயங்கள் பத்திராதிபரைச் சாரமாட்டா.

## திருநீறு.

—:o:—

ஐய!

பற்பல வேதமுடிவுகளில் சத்தும் சித்தும் ஆனந்தமுமாய் அமைந்தது என்றும் தமது திருத்தொண்டர் திருவுளங்களிக்க ஓர் திருவடிவந்தாங்கி அதனுல் அவரது ஸாலம்பசமாதியை நிறைவேற்றுவதும் அதர்வசிகை முதலிய உபநிடதங்களில் மும்மூர்த்திகளுக்கும் முதல் மூர்த்தியெனப் புகழப்பட்டதும் சுருதிகளால் உலகெலாங் கடந்த உண்மைப்பொருளென எடுத்துக் கூறப்பட்டதும், விதண்டாவாதிகளை ஒழித்த நாவலிமை பூண்ட ஸ்ரீமத் சங்கராசாரியர் ஸ்ரீவித்தியாரண்ணியர் ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதர் அவர்கள்முதலிய மாமுனிவர் குலதெய்வமும் ஸ்ரீமத் வாதராயணமாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய ஸ்ரீபிரமசூத்திரங்களின் உட்கருத்தாயமைந்ததுந் தமதா

[illegible]

ஞனுபாய வேதாகம தருமசாஸ்திரங்களால் அநேக ஜீவர்களை ஆண்டுவருவதுமான ஸ்ரீபரமசிவம் ஸகலவஸ்துக்களில் சிறந்ததென்றும், உலகத்தார் உபாசித்து நற்கதிபெறப் பெருங் கருவியென்றும், அநேக வேதங்கள் ஓதுகின்றன. அன்றி எமக்கு அன்னைபோன்ற சுருதி தமது அருமைக்களாய நம்மைநோக்கி அனுதியில் எமக்குள்ள அவித்தையையொழித்துப் பரமானந்தப் பெருவள்ளல் பெரும்போகம் விளைவிக்கக்கருதி "எல்லாவற்றையும் துறந்து சிவனையே வழிபடுக" என்று உபதேசித்து இனி உபதேசிக்கவேண்டிய விஷயம்மற்றொன்றுஇலலாமைபற்றி அதுமட்டில் தாம் முடிவெய்தியதை மற்றவரறியத் தம்முடிவைத்தாமே வெளியிட்டு அநேகதருமங்களை வெளியிட்டுமுடிவில்அதேமுடிவுறையாய்க்கொண்டு முடிந்தது. இவ்வேதம் அநேக தருமங்களை எடுத்துப் புகட்டியும், அம்மட்டில் தாம்போதித்த பரமசித்தாந்தத்திற்குப் போதாமை எண்ணிப் பரமாந்தரங்க சாதனமாய்த் திருநீற்றையே கூறுகின்றது. இனித்திருநீறு தரித்தல் மோக்ஷசாதனம் என்பதை எடுத்துக்குறிக்கும் வசனங்கள் பலவுளவேனும் அவைகளை வேதங்களைக் கற்றுணர்ந்தவர்க் கெடுத்தோத வேண்டுவதில்லை. இதற்கெனப் பிரமாணங்களும் "எங்கோ ஒரு உபநிடதத்தில் ஓர் வசனத்தில் இது குறிக்கப்பட்டது. சில நிபந்தனைகள் இதை அனுசரிக்கின்றன. ஓர் புராணத்தில் ஓர் மூலையில் இதற்குச் சாதகமான சில வசனங்களுள. இதை ஓர் பண்டிதர் ஒப்பினர்" "தமிழ்நாட்டில் ஓர்வகைப் பிராமணர் அனுஷ்டிக்கின்றார்" என்று தொடங்கித் தேடி எடுக்கவேண்டுவதில்லை. ஏனெனில், அநேக வேதங்களும் பல புராணங்களும் பற்பல இதிகாச வசனங்களும் இவ்விஷயத்திலிருக்கின்றன. ஆரியமதஸ்தர்களுள் பெரும்பான்மையோர் ஒப்பியனுஷ்டிக்கிறார்கள். எல்லா வருணத்தவர்களும் இதைக் கைக்கொண்டார்கள். ஆதலால் இதன்பெருமை எடுத்துரைக்க வல்லான் எவனுமில்லை. ஆதலாற்றான் ஸ்ரீகாலாக்கினி ருத்திரோபநிடதத்தில் "மோக்ஷமடைய விரும்புவான் தனது பிறப்பற இதைக் கொள்வானாக" என்று எழுதப்பட்டுள்ளது. இதே பொருளை அதர்வசிகையும் வெளியிட்டது. அங்ஙனமே "முமுக்ஷுவே அதற்கதிகாரி" யெனப் பிருஜ்ஜாபாலம் பஸ்மஜாபாலம் முதலிய அநேக உபநிடதங்கள் கூறுகின்றன. இங்ஙனமிருக்க. தற்காலத்தில் சிலர் தமது கன்மபரிபாக வலிமையாற் காரணமின்றி நமது சிவசாஸ்திரங்களில் வெறுப்புற்று அவற்றையும் அதின்படி நிற்பவரையும் அவர்கொண்ட திருநீற்றையும் அந்தோ! கடிக்குவருகிறார்கள்; அதை அவைதிகமென்கிறார்கள்; மற்றும் தாந்திரிகம் எனவும் கூறுகின்றார்கள். வேதங்களினின்று ஒரு வசனமாவது "அத்திருநீறணிதல் கூடாது" என எடுத்துக்காட்டாது வீண் வாதம் செய்து பல புராணுதிவசனங்களைக் காட்டிப் பகட்டி வருகின்றார்கள். இவர் எவ்வளவு புராண வசனங்களை எடுத்துக்காட்டி ஏட்டை நிறப்பினும் கதிரவன் ஒளி

[illegible]

கோ. வி. ஸா.

வீசக்கண்ட இருள்போல வேதவாக்கியங்கள் இத்திருநீறணிதலை விதிக்க மற்றெந்தப் பிரமாணந்தான் அதைத்தடுத்து வேறு சித்தாந்தம் செய்யுமோ பார்ப்போம். வைதிகராய நம்மவர்க்கு வேதத்தில் சொல்லியதே உடன்பாடு. அதை மற்றைய வழிநூல்கள் ஒப்பினும் ஒப்பாவிடினும் எமக்கும் யாதும் குறைவில்லை. இப்பொழுது "ஊர்த்துவபுண்டர மாகாத்மியம்" என்னும் ஓர் சிற புத்தகமியற்றிய ஒருவர் திருநீறணிதல் "தாந்திரிகம்" என்றார். இஃது மிக வியக்கத்தக்கதே. அவர் தமதபிப்பிராயமே வேதத்துக்கு மூள்ளதென்றார். அதற்கென அவர்காட்டிய காரணங்கள் வருமாறு:—

1. வாசுதேவ உபநிடதத்தில் ஊர்த்துவபுண்டரத்தை விதிக்குமிடத்து "இஃது வைதிகரான பிராமணர்களுக்குரியது" என்றிருக்கத் திருநீறணிய வகுத்த காலாக்கினி ருத்திர உபநிடதம் முதலியவை அங்ஙனம் எடுத்தோதவில்லை.

2. அங்கு தாந்திரிகர் எனச்சொல்லத்தக்க சைவர் பாசுபதர் சாம்பவர் என்பவரோ அதிகாரிகளாகக் குறிப்பிடப்படுகின்றார்கள். "பாசுபதர்" என்பவரோ தாந்திரிகம் என்பது சிவபுராண சுசங்கிதையில் சொல்லப்பட்டது.

3. பாத்தும புராணத்திலும் பாஞ்சராத்திரத்திலும் இத் திருநீறு தரித்தல் மிகக்கொடிய பாவம் என்றிருக்கின்றது. என்பன. இவைகளை நன்றாக விரித்து மறுப்பாம்.

விபூதி தரித்தல் அவைதிகம் என்பதற்கு முதற்காரணம். கோபீசந்தனம் போட விதித்தவிடத்து அதை "வைதிகர் பிராமணர் தரிக்கவேண்டும்" என்று இருத்தலே "யாம் எமக்கு வாசுதேவோபநிடதத்தில் இவ்வசனம் இருப்பதில் ஏதேனும் சமுசயமில்லை. ஆயின் அதைக்கொண்டு திருநீற்றை அவைதிகம் எனக்கொள்ளுதல்மட்டில் அமையாது. இனி எங்கெங்கு "இதை வைதிகர் செய்ய" என்று எடுக்கப்படவில்லை? அது அவைதிகம் எனில் சந்தியாவந்தனம் அக்கினி காரியம்முதலிய எக்கருமங்களும் வைதிகங்களாவது மிகக் கடினம். வேதங்களில் விதித்த இக்கருமங்களை வைதிகரே செய்யவேண்டும் என்று எங்கும் எடுத்துரைக்கப்படவில்லையே? இனி அப்படி இருப்பினும் இல்லாவிடினும் குற்றமில்லை. அங்கு திருநீறணிய வதிகாரிகள் பாசுபதர் முதலியோர் என்பதால் தாந்திரிகரே அதற்கதிகாரிகளாகின்றார்கள் எனில், இவரை நாம் சில கேள்விகள் கேட்போம். ஐய! தாந்திரிகம் என்றால் என்ன? அவை வேதங்களுக்கும் உள்ளனவோ? அங்ஙனமாயின் இவைகளைத் தாந்திரிகங்களென்றுவது வைதிகமென்றுவது பகுத்தறிவதெப்படி? தாந்திரிகரைக் குறிக்கும் பதமே அப்படிச்சொல்லக்காரணம் எனில் "தாந்திரிகரைக் குறிக்கும் பதம்" என்றால் அவரைமட்டில் குறிக்கும் பதமா? அல்லது அவரையும் வைதிகரையும்சேர்த்துக்குறிக்கும் பதமா?

(மொழிபெயர்ப்பு.) மற்றது வரும்.

கொ. வி. ஸா.

## கோபுசெட்டிப்பாளையம் வாலிபர்கள் சபையில், சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபந்நியாசம்.

(முன்தொடர்பு.)

வேதங்கள், சுருதி, ஸ்மிருதி, புராணங்கள் இவைகளின் பெயர்கள் தெரிந்தவரையில் இதனடியில் எழுதப்படுகின்றன.

1, வேதங்கள் ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் இவைகளைச் சேர்ந்த உபநிஷத்துக்கள், சூத்திரங்கள், பாஷியங்கள், உட்பட 4. உபவேதங்கள் ஆயுள்வேதம், (வைத்தியம்) தனுர்வேதம் (அஸ்திரசஸ்திரவித்தை) காந்தர்வம் (சங்கீதம், பரதம்) அர்த்தவேதம் (திரவிய சம்பாதன வித்தை) வேதாங்கங்கள் சிட்சா (வேதலக்ஷணம்) கல்பம் (கருமங்களைச்சொல்வது) வியாகரணம் (இலக்கணம்) நிருக்தம் (வேதார்த்தம்) ஜோதிஷம் (பூகோளம், ககோளம், கணிதம், ஜாதகபாவம, சகுனம் முதலியவை) சந்தஸ் (விருத்தலக்ஷணம்) ஆக. 6. உபாகடங்கள் பூர்வமீமாஞ்சை (யக்ஞாதி கருமங்களைச் சொல்வது (உத்தர மீமாம்சை (ஞானகாண்டம்) இவ்விஷயத்திலுள்ள பாஷ்யம், வியாக்கியானம், டிப்பணி முதலிய சகல கிரந்தங்களும் (நியாயம்) தர்க்க சாஸ்திரமும் உட்பட ஆக 4.

### புராணங்கள்.

பிரமபுராணம், பத்மபுராணம், விஷ்ணுபுராணம், சைவபுராணம், பாகவதபுராணம், நாரதீயபுராணம், பவிஷியத்புராணம், மார்க்கண்டேயபுராணம், ஆக்நேயபுராணம், பிரம்மகைவர்த்தபுராணம், லிங்கபுராணம், வராகபுராணம், ஸ்காந்தபுராணம், வாமனபுராணம், மத்ஸ்யபுராணம், கூர்மபுராணம், காருடபுராணம், பிரமமாண்டபுராணம் ஆக 18.

உபபுராணம். சனற்குமாரம், நாரசிம்மகம், நந்தி, சிவதருமம், ர்தூவாசம், நாரதீயம், கபிலம், மானவம், உசனம், பிரம்மாண்டம், வாருணம், காளி, வாசிஷ்டலிங்கம், சாம்பவம, பராசரம், மாரீச்சியம், பார்க்கவம் என்னும இந்த நாமதேயமுள்ளவர்களால் நிர்மிதமான அஷ்டாதச வுபபுராணம் வைதிக தர்மமே பிரதிபாதிக்கும்.

### இதிகாசம்.

பாரதம், இராமாயணம் முதலியன வியாச வான்மீகாதிகளாலுண்டான இதிகாசங்கள் யுதிஷ்டிர ராமசந்திராதிகள் சரித்திரங்களும் வைதிக தர்மங்களும் பிரதிபாதித்துச் சொல்லும்.

### ஸ்மிருதி.

மனு, அத்திரி, ஔரிதம், விஷ்ணு, யாக்ஞயவற்கியம், உசனம், ஆங்கிரசம், யமம், ஆபஸ்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம, பிரகஸ்பதி, பாராசரம், வியாசம், சங்கிலிதம், தக்ஷம், கௌதமம், சாதாத்மம், வசிஷ்டம் என அந்தந்த நாமதேயமுள்ளவர்களால் சொல்லப்பட்ட தர்மசாத்திரம் 19.

### உபநிஷத்துக்கள்.

சிருத்திரம், பிரகதாரண்ணியம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாஸ்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, சுரசபிந்து, பிரமசபாலம், தேஜோபிந்து, வாசசநேயம், போதாயனீயம், ஆசுவலாயனீயம், சாங்கியாயனீயம், வாக்கிலியாயநீயம், சௌனகீயம், சிவசங்கற்பம், சிரவணம், பராக்கிரமம், புரோஷயம, முத்கலம், முண்டகம், மைத்திராயநீயம் எனனும் 32. உபநிஷத்துக்களும் ஞானாங்கமான விபூதி ருத்திராக்ஷாதிகளையும் பிரம்மஞானாதிகளையும் விவரித்துச் சொல்லும்.

வைசேஷிகம், வைநாசிகம் முதலிய தர்க்கசாஸ்திரங்கள் காவியநாடகாலங்கார முதலிய சாத்திரங்களும், யந்திரசாத்திரம், யோகசாததிரம், சிற்பசாத்திரம், சருமவிபாகம், பிராயச்சித்தங்கள், சாந்திகள், ஜபங்கள், பூஜைகள் இவைகளைச் சொல்லும் சாத்திரங்கள், பாகசாத்திரம், ஜாலசாஸ்திரம், வாக்கியாயனதந்திரம், குளார்னவம் இவைகளுக்குண்டான வியாகியானம் முதலிய சகலமும்.

இந்த வேதசாத்திராதிகளின் கிரந்த சங்கிகைகள் அநேககோடிகளாயிருக்கின்றன. இவ்வளவென்று கணக்குத்தெரியாது. இவ்விஷயங்கள் மூன்று பாகங்களாகப் பிரித்திருக்கின்றன. 1-வது பாகத்தில் சருமவிஷயம், அதாவது ஈசுவரோபாஸனாவிஷயம். இதில் ஈசுவரபக்தி, பகவன் நாமோச்சாரணம, மந்திரஜபம், விக்கிரகாராதனம், யோகவிஷயம், யாகாதிசருமவிஷயம், புராணம், சங்கீதம், பரதம, பாகசாத்திரம், தேவீவிஷயம், ஆக 10-ம், இரண்டாம்பாகத்தில் லௌகிகவிஷயம். இதில் தருமசாத்திரம், வைத்தியசாத்திரம், பூகோளககோளகணிதம் உட்பட ஜோதிஷம், ஜாலசாத்திரம், வாக்கியாயனதந்திரம் ஆக 5-ம், மூன்றும்பாகத்தில் ஞானவிஷயம். இதில் வியாகரணம், சந்தஸ்சாத்திரம், தர்க்கசாத்திரம், பூர்வமீமாஞ்சை, உததரமீமாஞ்சை யென்னும் வேதாந்தம் ஆக 5-ம், இந்த வேதசாத்திராதிகளில், சகுண நிர்க்குண பிரம்ம சுவரூபத்தையும், அதின் மகிமையையும், பிரபஞ்சத்தின் சிருட்டி ஸ்திதி சங்காராதிக் கிரமங்களையும், பிரம்மஞானிவருணாச்சிரம தர்மங்களையும், நீதிகளையும், தாயபாகாதி விவகாரங்களையும், புண்ணிய பாபங்களையும், அவைகளைச் செய்கிறவர்களுக்குக் கிடைக்கும் பலன்களையும், ஆசாரப் பிராயச்சித்தாதி கருமங்களையும், ஞானத்தையும் பின்னும் மனிதனுக்குரியசகல காரியங்களையும் சொல்லியிருக்கின்றது. அதுவருமாறு:

### 5- ஜாதியைப்பற்றி

பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களென்கிற 4. வர்ணங்கள் விராட்ரூபியான பகவானுடைய முகம், புஜம, துடை, கால் இந்த அங்கங்களிலிருந்து உண்டானதாக இந்தேசத்தில் சொல்லப்படுவது பிராமணர்களுடைய கட்டுப்பாடென்று சொல்வதைப்பற்றி முந்திச் சிறிது விசாரம் செய்யவேண்டியது அவசியமாயிருக்கின்றது.

பிராமண சப்தத்துக்குப் பிரம்மாவின் வம்சஸ்தரென்றுவது பிரம்மஞானிகளென்றுவது, வேதோக்தமான யோக்கியதையுடையவும் அதிகாரத்தினுடையவும் வேதாத்தியயனம் செய்கிறவர்களென்றுவது அர்த்தமாகும். இப்படிப்பட்ட யோக்கியதையுள்ளவர்களைத்தான் தானாதிசத்காரங்களாற் பூசிக்கவேண்டுமென்று வேதசாத்திரங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றது.

வேதம் அநாதியென்றும், அபௌருஷேயம் ஒருவராற் கற்பிக்கப்பட்டதல்லவென்றும், அதிற் சொல்லியிருக்கிறதெல்லாம் சத்தியமென்றும் ஆஸ்திகராகிய நாமெல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோமே தவிரப் பொய்யென்று சொல்லுகிறதில்லை யல்ல

வா? பொய்யென்று சொல்லவும் கூடாதல்லவா? ஆகையால் அப்படிப்பட்ட வேதத்தில் சிருட்டிகாலத்தில் விராட்ருபியான ஜ*தீசுவரனுடைய மேற்குறித்த அவயவங்களிலிருந்து பிராமணாதி நாலுவர்ணங்களும் உற்பத்தியானார்களென்று சொல்லியிருப்பதை நம்பக்கட்டுப்பட்டிருக்கிறோம். விசித்திரப் பிரபஞ்சத்தை யுண்டுசெய்த ஈசுவரனுடைய மகிமைக்கு அப்படி உற்பத்திசெய்வது ஒரு பெரியகாரியமாகவு மாட்டாது.

இந்த இந்தியாதேசமானது அநேகசதுர யோசனையுள்ள ஒரு பெரிய தேசம். இதில் ஒவ்வொரு பிரதேசத்துக்கு ஒவ்வொரு இராஜா வீதம் அநேக இராஜாக்களிருந்ததாகக் கிரந்திகளாலும் அநுபவத்தாலும் தெரியவருகின்றது.

வரும்.

## பத்திராதிபர் அபிப்பிராயம்.

பகவான் இயல்பு வினாவிடை, பரப்ரம்ம டஞ்சாத்தினம், பரப்ரம்மபஜனை, ப்ரம்மகாயத்திரி, வேதங்கள் ஆகிய இவைகளடங்கிய ஓர் புத்தகம் எம்பாலணுகியது. இவற்றுள் "பகவான் இயல்புவினாவிடை" என்பது பகவானியல்பைப்பற்றித் தார்க்கிகனுக்கும் சமாதானனுக்கும் நடந்த சம்பாஷணையாக எடுத்து விளக்கப்பட்டதுமன்றி அந்நியமதத்தவர்கள் பற்பல சமயங்களில் வினவும் வினாக்களுக்குத் தக்க பதிலளிக்கவும், உண்மதச்சண்டைகளை அகற்றவும் ஓர் பெருங்கருவியாகின்றது. இவற்றின் விஷயம் மிகவரிதாயும் இன்றியமையாததாகவிருந்தும் இதன்விலை அணா 0—2—0 தான். இதனை ஒவ்வொருவரும் வாங்கிப்படித்து அவ்வழியொழுகுதல் சாலவும் நன்று. இவற்றிலொருகாபி எமக்கு அனுப்பியதற்கு யாம் அகமகிழ்ந்து வந்தனமளிக்கற்பாலதாம். இதனை வாங்குவோர் ஆ. ஐ. சேஷாசலமுதலியார் அவர்கள், ஷாப்வர்த்தகம், பெங்களூர். இவர் பெருக்குமேற்குறித்த விலையைக்கட்டிப்பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்.


கடவுள் துணை.

Terms:—Cash.　　　　விலை ரொக்கம்.

NOW READY FOR SALE.

### விரோதவருஷத்திய

ரிப்பன் தமிழ்ப் பாக்கெட் பஞ்சாங்கம்.

விற்பனைக்குத் தயாராக விருக்கிறது.

பிரதி 1-க்கு விலை அணா அரை; பிரதி 1-க்கு தபாற்கூலி அணா அரை.

பாக்கிங் சார்ஜு பிரதி 1-க்கு 0-0-6; 10-க்கு 0-2-0; 25-க்கு 0-4-0; 50-க்கு 0-6-0; 100-க்கு 0-8-0.

ஒரேமுறையில 10 புத்தகங்கள் வாங்குவோர்க்கு 1-ம்; 25-க்கு 3-ம்; 50-க்கு 7-ம்; 1000-க்கு 15-ம்; கம்மீஷன் சேர்க்கப்படும்.

கொஞ்சம் காப்பிகள்தான் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றனவாதலின் வேண்டுவோர் கூடிய சீக்கிரம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டியது.

மதராஸ் ரிப்பன்பிரெஸ்　　　　இங்ஙனம்,<br>
316-தம்புசெட்டி வீதி　　　　வை. இரத்தினசெட்டியார்,<br>
சென்னை.　　　　சொந்தக்காரர்.



### விளம்பரம்.

யாவர்க்கும் உபயோகம்!!

☞ ப்ரம்மவித்தியா தவக்கிய முதல் இரண்டுவருடங்கள் வரையிலுமுள்ள பத்திரிகைகளனைத்தும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டு பயிண்டு செய்யப்பட்ட புத்தகங்கள் 50-இ விலைபெற்றதுபோக பாக்கியுள்ளகாப்பிகள் சொற்பதே; உள்ளதாயி மிகசொற்பமாதலின், ஒருவருடப்புத்தகம் 1-க்கு 2—8—0 ஆக இரண்டுவருடப்புத்தகங்கள் 5 ரூபாய்க்கு விற்கப்படும். வேண்டுவோர், போஸ்டேஜ் உள்பட 5—6—0 மாகச்சேர்த்தனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். பேருல் வராது.


## இந்துடிராக்ட் சொஸைட்டி.

(இந்து லகுலேக சங்கம்.)

இஃது 1887ளூ ஏப்பிரல்மீ 27உ ஸ்தாபிக்கப்பட்டது

இச்சங்கத்தின் கருத்து:— இந்துமதத்தைப் பரவச்செய்து, அதன் விரோதிகளைக் கண்டித்துத் தேசக்ஷேமத்தைக் காக்கலாம். இச்சங்கத்தில் மெம்பர்களாகச்சேர விருப்பமுள்ளவர்கள் வருஷம் 1-இ குறைந்த சந்தா 1—4—0 முன்பணமாகக்கட்டவேண்டியது.

ஏப்ரல்மீ முதல் மறுவருஷம் மார்ச்சுமீ வரையில் அந்த வருஷமுடிவாகும்.

அக்கிராசனாதிபதி:— R. சிவசங்கரபண்டியா. B. A. F. T. S. அவர்கள்

வெளியூர் உப அக்கிராசனாதிபதி:— சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ து. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள்

காரியதரிசி:— ஸ்ரீமான் M. A. கிருஷ்ணமாசாரியார் B. A. அவர்கள்.

இந்தச் சங்கத்தைப்பற்றி மற்றவிஷயங்களை அறியவிரும்புபவர்கள், அரையணாஸ்டாம்பாவது, ரிப்ளை கார்டாவது அனுப்பிக் கேட்டுக்கொள்ளலாம்.


ஸ்ரீ சிதம்பரம் ப்ரம்மவித்யா முத்ராக்ஷரசாலையில் விற்கப்படும் க்ரந்தங்கள்.

| | |
|---|---|
| ஸர்வதர்சநஸங்க்ரஹம்) | |
| ஸ்ரீ ராமோதந்தம் ஸடீகம்) | 0 அ 0 |
| காவ்யம் (ஸம்ஸ்க்ருதம்) | |
| விராவசக்ஷணமாலிகா (ஸமாப்தம்) | 0 0 ௩ |
| ஸ்ரீ க்ருஷ்ணசரிதம் ஸடீகம்) | |
| வேதாந்தஸாரம்) | 0 ௫ 0 |
| சிதம்பரமாஹாத்ம்யம் (ஸம்ஸ்க்ருதம்) | 0 ௬0 0 |
| சிதம்பரமாஹாத்ம்யஸங்க்ரஹம்) | |
| வஜ்ரஸூசிகோபநிஷத்) | 0 ௪ ௩ |
| நாராயணஸ்தோத்ரம் (ஸம்ஸ்க்ருதம்) | 0 ௬ 0 |
| முதலியபுஸ்தகங்கள். | |
| Bible Disector (English) . . . . . | 0 0 9 |
| One Hundred anb Fifty Contradictions of the Bible (English) . . . . . | 0 1 0 |



Printed and Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.